




திருவாரூர் மாவட்டம் கோவில்திருமாளத்தைச் சேர்ந்த கழக மூத்த முன்னோடி, திருவாரூர் மாவட்ட வேளாண் விற்பனை குழு முன்னாள் தலைவர் 102 வயது பெரியவர் கோ.தட்சிணாமூர்த்தி அவர்களை கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி கல்யாணம் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் குடவாசல் ஒன்றிய குழு முன்னாள் துணை தலைவர் ஆலத்தூர் ஜி.ஆர். பாண்டியன் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.

### நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக சார்பில் – கழக நிர்வாகிகள் குடும்பத்தில் உள்ள உயர்கல்வி பயிலும்

# 90 வாரிசுகளுக்கு ரூ. 17 லட்சம் மதிப்பில் கலைஞர் கல்வி உதவித் தொகை!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. வழங்கினார்!

*நாமக்கல், ஜன.3-*

நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் கிளை கழகம், வார்டு கழகத்தில் தற்போது பொறுப்பில் உள்ள அவைத் தலைவர், துணை செயலாளர், பொருளாளர் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர், சார்பு அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர் மற்றும் தொடர்ந்து கழகத்தில் 3 மற்றும் 2 உறுப்பினர் அட்டைகளுக்கு குறையாமல் உள்ளவர்களின் நிர்வாகிகள் குடும்பத்தில் உயர்கல்வி பயிலும் 90 வாரிசுகளுக்கு மாவட்ட கழகம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் கல்வி உதவித்தொகையை கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி வழங்கினார்.



நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் நாமக்கல் சேந்தமங்கலம் ராசிபுரம் ஆகிய 3 சட்டமன்ற தொகுதிகளில் ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் உள்ள கிளை, வார்டு செயலாளர்கள், பிரதிநிதிகள் மற்றும் BLA 2 நிர்வாகிகள், நகர கழக நிர்வாகிகள் குடும்ப வாரிசுகளுக்கு கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் மற்றும் கழக இளைஞர் அணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் வழிகாட்டுதலுடன் மாவட்ட கழக செயலாளர் பொறுப்பேற்றது முதல் முத்தமிழறிஞர் கலைஞர் கல்வி உதவித்தொகை என்ற பெயரில் வழங்கி வருகிறார்.

அதன்படி நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயம், இனமானப் பேராசிரியர் கூட்ட அரங்கில் நாமக்கல் கிழக்கு நகரம் நாமக்கல் மேற்கு நகரம் நாமக்கல் தெற்கு நகரம் ராசிபுரம் நகரம் ஆகிய மூன்று பகுதிகளைச் சேர்ந்த கிளை கழகம், வார்டு கழகத்தில் தற்போது பொறுப்பில் உள்ள அவைத்தலைவர், துணை செயலாளர், பொருளாளர் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர், சார்பு அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர் மற்றும் தொடர்ந்து கழகத்தில் 3 மற்றும் 2 உறுப்பினர் அட்டைகளுக்கு குறையாமல் உள்ளவர்களின் குடும்பத்தில்

உயர்கல்வி பயிலும் 90 வாரிசுகளுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் கல்வி உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமை தாங்கி, தொழிற்கல்வி படிக்கும் 41 பேருக்கும், பட்டப்படிப்பு படிக்கும் 49 பேருக்கும் ஆக மொத்தம் 90 வாரிசுகளுக்கு கலைஞர் கல்வி உதவித் தொகையை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் மாநகராட்சி மேயர் து.கலாநிதி, துணை மேயரும், நாமக்கல் கிழக்கு நகர கழக செயலாளருமான செ.பூபதி, நகரக் கழக செயலாளர்கள் ராசிபுரம் என்.ஆர்.சங்கர், நாமக்கல் தெற்கு ராணா ஆனந்த், நாமக்கல் மேற்கு அ.சிவகுமார் மற்றும் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதி நிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

